பக்கங்கள் 28

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆனி 04 திங்கட்கிழமை 17.06.2024 அதிர்வு 321

## மைதானத்துக்குள் புகுந்து வாள்வெட்டு!

### காடையர் குழு மடக்கிப் பிடிப்பு

கரப்பந்தாட்ட இறுதியாட்டம் நடைபெறவிருந்த மைதானத்துக்குள் புகுந்து வாள்வெட்டு நடத்திய குழுவொன்று பொதுமக்களால் மடக்கிப் பிடிக் 05▶



### ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்பட்டால்

# தமிழ் மக்களின் வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும்!

### வவுனியாவில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கே.வசந்தன்)

“ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்படுமாக இருந்தால் தமிழ் பேசும் மக்களின் வாக்குப் பலம் பிரதானமாக இருக்கும். இதனை நாம் உதாசீனம் செய்யக்கூடாது. தமிழ்ப் பொது வேட்பாளரைக் நிறுத்தும் விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் முடிவுகள் எடுக்கப்படவில்லை.” 04▶



# ரணில் - அநுர இணைந்து சஜித்துக்கு எதிராகச் சதி!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



“ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவது உறுதியாகியுள்ள நிலையில், அவருக்கு எதிராக சூழ்ச்சி செய்யும் நடவடிக்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் இணைந்து செயற்படுகின்றனர் என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அநுரகுமார திஸாநாயக்க 05▶




வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் புதிய கொள்கை முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

ஆனாலும் இரண்டு முக்கிய விடயங்கள் நடந்தேறின.

ஒன்று - கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் காரசாரமாக நடந்த வாக்குவாதம்.

திருகோணமலையில் நடந்து முடிந்த கட்சியின் தேசிய மாநாட்டுக்கான பொதுக்குழுக் கூட்டத்தில் கடைசி நேரத்தில் ஒரு டசினுக்கும் மேற்பட்டவர்களைக் கூட்டி வந்து, அவர்களையும் தேர்வுகளில் வாக்களிக்க விட வேண்டும் என்று தலைவர் மாவை சேனாதிராஜா 04▶



# மலையகப் பட்டதாரிகள் நேற்று ஹட்டனில் கவனவீர்ப்புப் பேரணி

தமக்கு அரசாங்க வேலைகளை வழங்குமாறு கோரி தோட்ட வேலையற்ற பட்டதாரிகளால் கடந்த 16ஆம் திகதி ஹட்டன் நகரில் கவனவீர்ப்புப் பேரணியும் போராட்டமும் நடத்தப்பட்டது.

ஹட்டன் நகர மையத்தில் இருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஹட்டன் மல்லியப்பு சந்தி வரை சென்று அங்கு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

தற்போது தோட்ட பகுதியில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், அந்த ஆசிரியர் பற்றாக்குறையை நிரப்புவதற்கு வேலையற்ற நிலையில் இருக்கும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பதவிகள் வழங்க முடியும் எனவும் ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், பல்வேறு அரசுப் பணிகளுக்காகப் பட்டதாரிகளாக உள்ள தமக்கு அந்தப் பதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தப் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.









# கொழும்பு கம்பன் விழா நேற்றுக் காலை நிகழ்வு

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கொழும்புக் கம்பன் விழா 2024 இன் மூன்றாம் நாளான நேற்றுக் காலை நடைபெற்ற தனியுரை நிகழ்வை டாக்டர் அ. ஸ்ரீதரன் தம்பதியினர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வித்தனர்.

தொடர்ந்து கடவுள் வாழ்த்தை செல்வி. தில்ஷா கிருஷ்ண குமார் இசைத்தார். முல்லைத்தீவு அரச அதிபர் அ. உமாம கேஸ்வரனின் தலைமையுரைத் தொடர்ந்து தொடக்க உரையை பேராசிரியர் வ.மகேஸ்வரன் நிகழ்த்தினார். அந்த நிகழ்வைத் தலைமை ஏற்று முனைவர் பாரதி கிருஷ்ணகுமார் நடத்தினார். தொடர்ந்து கம்பவாரிதி இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெற்ற “பேதைமைப் பெண்மையின் மேதகு வாசகங்கள்“ என்னும் கருப்பொருளிலான கருத்தரங்கு நிகழ்வில் பர்வின் சுல்தானா (“முன்னம்முடி”), கே.சுமதி(“நின்னினும் நல்லவன்“), ம. கோசலை (பிரிவினும் சுடுமோ?“ ஆகியோர் கருத்துரைத்தனர்.

அந்நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை:-













# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி நேரம் வரை அடம் பிடித்தார் என்பது தெரிந்ததே.

அவர்களை வாக்களிக்க அனுமதிக்காவிட்டால் அன்றைய தினம் தெரிவுகளுக்கோ, வாக்களிப்புக்கோ தான் இடமளிக்க மாட்டார் என்று மாவை சேனாதிராஜா குறிப்பிட்டமையால் வேறு வழியின்றி அதற்குத் தாங்கள் இணங்க வேண்டியதாயிற்று என்ற சாரப்பட, இவ்விடயத்தை ஒட்டிய வழக்கில் தமது சத்தியப் பிரமாண ஆவணத்தில் சுமந்திரன் சுட்டிக்காட்டி இருந்தார்.

அந்தப் பொதுக்குழு கூட்டத்துக்கு அன்றைய தினம் பொதுச்செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் வருகை தராத நிலையில் அவரின் பணி துணைச் செயலாளரான சுமந்திரன் மீது விழுந்திருந்தது.

தலைவர் தாம் கூட்டி வந்தவர்களை அனுமதிக்க வேண்டும், இல்லையேல் பொதுக்குழுக் கூட்டத்தை நடத்த விட மாட்டேன் என்று ஒற்றைக் காலில் அடம்பிடித்து நின்றமையால்தான் அவர்களை வாக்களிக்க அனுமதித்தேன் என்ற சுமந்திரனின் சமர்ப்பணத்தின் சூடு இப்போதுதான் மாவையருக்கு சுட்டிருக்கின்றது போலும்.

நேற்றைய மத்திய குழு கூட்டத்தில், தான் முன்னர் அந்தப் பொதுக் குழுக் கூட்டத்தை நடத்த விட மாட்டேன் என்று அப்போது கூறவில்லை என்றும், ஆகவே அந்தக் கூற்றை நீதிமன்ற சமர்ப்பணத்தில் சுமந்திரன் விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் மாவை வலியுறுத்தினார். சுமந்திரன் அதற்குப் பதிலடி கொடுத்தார். இல்லை, நீங்கள் அப்படி கூறினீர்கள், ஆகவே அதை விலக்கிக் கொள்ள முடியாது என சுமந்திரன் இறுக்கமாக கூற, வார்த்தைகள் தடித்து, விடயம் மோசமான கட்டத்தை அடைந்தது.

கூட்டத்திலிருந்த மாவை சேனாதிராஜாவின் மகன் இதுகுறித்து எழுந்து பேச, அதை சுமந்திரன் ஆட்சேபித்தார். மத்திய குழு உறுப்பினர் அல்லாத ஒருவர் இங்கு எப்படிக் கருத்துரைக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பினார்.

அதை அடுத்து எழுந்து தந்தைக்கு நெருக்கமாக வந்த மாவையின் மகன், மாவையையும் தாறுமாறாகப் பேசி விட்டு, கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

இந்த வாதச் சாட்டில் சுமந்திரன் சமர்த்தியமாக மாவைக்குப் போட்டுப் பிடித்து விட்டார் என்று கூட்டத்தில் பார்வையாளர் போல பங்கு பற்றிய ஓர் உறுப்பினர் தெரிவித்தார்.

அடுத்த விடயம் - இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட இன்னொரு நாட்டவர் கட்சியில் உறுப்பினராக இருக்க முடியாது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த விடயத்தில் சி.வி.கே.சிவஞானம் ஒற்றைக்காலில் நின்று புரிந்த வாதத்தை மத்திய குழு செவிமடுத்து இணங்கியது.

புதிதாக உறுப்புரிமை விண்ணப்பம் தந்த ஒருவர் மற்றும் இப்போது உறுப்புரிமை பெற்றவராகக் கருதிக் கொண்டு கட்சியின் பெயரிலான நாளிதழைத் தம்பாட்டில் வெளியிட்டு வருபவர் ஆகியோர் விடயத்திலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் பதிவுக்காக எழுத்து மூலமாக ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கும்படி சிவஞானம் நேற்றைய கூட்டத்தில் பணிக்கப்பட்டிருக்கின்றார்.

கட்சிச் செலவினத்துக்கு நிதி தந்தவர், அதைத் தந்து விட்டு, கட்சித் தலைவரையும் கட்சியையும் பகிரங்க வெளியில் மோசமாக விமர்சிக்கும் போது அவரின் அந்த உறுப்புரிமையை ஏற்க முடியாது, ஏற்கக் கூடாது என்று நேற்றைய கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

எனினும், அவருக்கு உறுப்புரிமை வழங்கக் கூடாது என்ற முடிவுக்குத் தாம் ஆட்சேபனை தெரிவிக்கிறார் என்பதைப் பதிவு செய்யும்படி சிறிதரன் எம்.பி. கேட்டுக் கொண்டார் எனவும் தெரியவந்தது.

✦ ✦ ✦

நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னார் வந்து, பொது நிகழ்வில் பங்கு கொண்டு திரும்பினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டபோது,

அதற்கான முன்னேற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னின்று மேற்கொண்டார்.

அது போல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேற்றைய மன்னார் விஜயத்துக்கு பின்புலத்தில் நின்று விடயங்களைக் கையாண்டவர்கள் நமது வன்னி மாவட்ட தமிழ் எம்.பிக்கள் இருவர்தான் என்று மன்னார் பிரமுகர் ஒருவர் சொன்னார்.

"மன்னார் மாவட்டத்தில் பல்வேறு விதமான பிரச்சினைகள் பூதாகரமாக உள்ளன. குறிப்பாக மன்னார் தீவுப் பகுதியிலே காற்றாலை அமைக்கும் விவகாரம், டைட்டானியம் அகழ்வு விடயம், மீனவர்களின் அத்தியாவசியப் பிரச்சினைகள், வனத் திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம் போன்றவற்றின் அத்துமீறல்கள், காணிப் பிணக்குகள், மன்னார்த் தீவுப் பகுதியில் சட்டவிரோத நில அபகரிப்பு போன்ற விடயங்களுக்கு எல்லாம் மக்கள் போராடுகின்ற போது கண்டும் காணாமலும் இருந்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் மன்னார் வருகைக்கு, அவர்களே முன்னின்று ஆயத்தக் கூட்டங்களையும் நடத்தி, இளைஞர்களையும் ஒன்று கூட்டி, தேர்தல் வேலையில் ஈடுபடுகிறார்கள். அதிலும் செல்வம் அடைக்கலநாதன் பொது வேட்பாளருக்கு ஆதரவு என ஒரு பக்கத்தில் தெரிவித்து விட்டு, மறுபக்கத்தில் ஜனாதிபதிக்கு சாமரம் வீசுகிறார். ஏன் இந்த இரட்டை வேடம்? நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலாநாதன் ஜனாதிபதியோடு மிகவும் நெருக்கமான உறவில் உள்ளவர். தமது கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஒரு காலும் ஜனாதிபதியுடனான கூட்டத்தில் ஒரு காலுமாக ஜனாதிபதியோடு நெருக்கமாக உரையாடுகிறார். இதனால் வன்னி மக்களோ, மன்னார் மக்களோ அடைந்த பயன் என்ன? தங்களினுடைய நலன்களையும் தங்களினுடைய வணிகத்தையுமே மேம்படுத்தும் பணியில் இவர்கள் ஈடுபடுகிறார்கள். வாக்கு போட்டவன் நிலைமை பரிதாபம்." - இப்படி அந்தப் பிரமுகர் நொந்து கொண்டார்.

பாவம்... எதுவும் அறியாத மன்னார் மக்கள்...!

## தமிழ் மக்களின்...

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபாதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் உரிய நேரத்தில் தீர்மானம் எடுப்போம். ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்கள் யார் என்று இன்னமும் தெரியாது. அவர்களுடைய தேர்தல் அறிக்கைகள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. அதன் பின்னர் தீர்மானிப்பதாகவே முடிவெடுத்திருந்தோம்.

அத்துடன் தங்களை வேட்பாளர்களாக அறிவித்துள்ள இருவர் தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்துக்கு வந்து எங்களுடன் பேச்சு நடத்தியுள்ளனர். இதுவொரு ஆரம்பகட்ட பேச்சு. நாங்கள் தொடர்ந்தும் இவ்வாறானவர்களுடன் பேசுவோம். ரணில் விக்கிரமசிங்க தன்னை வேட்பாளராக அறிவித்தால் அவரோடும் பேசுவோம்.

முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால், இதுவரை அதிகாரப் பகிர்வு தொடர்பாக பொதுவெளியில் சொல்லக் கூச்சப்பட்டுக் கொண்டிருந்த வேட்பாளர்கள் போட்டிபோட்டுக்கொண்டு 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவோம் என்று சொல்லத் தலைப்பட்டுள்ளனர்.

அது முழுமையான தீர்வு அல்ல. அதனை நாம் ஏற்கவில்லை. ஆனால், அரசமைப்பில் உள்ளதையாவது அமுல்படுத்த வேண்டும் என்பதை நாம் சொல்லியிருக்கின்றோம். எனவே, அந்தப் பேச்சுகள் ஆராக்கியமாக இருந்தன. அவர்கள் சொன்னதைச் செய்வார்களா என்ற சந்தேகம் அனைவருக்கும் இருக்கின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி ஒன்று ஏற்படுமாக இருந்தால் தமிழ் பேசும் மக்களின் வாக்குப் பலம் பிரதானமாக இருக்கும். இதனை நாம் உதாசீனம் செய்யக்கூடாது. மிகவும் கவனமாக எமது பேரம்பேசுதலை நடத்த வேண்டும். சந்தர்ப்பத்தைச் சரியாக உபயோகப்படுத்த வேண்டும் என்ற கருத்தோடு நாங்கள் இருக்கின்றோம்.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக கடந்த மத்திய குழுக் கூட்டத்திலேயே பலர் எதிரான கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். எனவே, இன்று (நேற்று) அதைப் பற்றி பேசவில்லை. மக்களது கருத்துக்களையும் அறிந்து தனிப்பட்ட கருத்துக்களைச் சொல்வதற்கான சுயாதீனம் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட் டுள்ளது.

அத்துடன சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் வழமையாகவே நிற்பவர். பழக்கதோசத்தில் அவர் நிற்கலாம். அதில் எமக்குப் பிரச்சனையில்லை."

– என்றார்.




# தீராக் காதலால் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்ட இளைஞர்

இசை நிகழ்ச்சியில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில் 20 வயதுடைய இளைஞர் ஒருவர் கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையுடன் தொடர்புடையதாகக் கைதான சந்தேகநபர், பெண் ஒருவரைத் திருமணம் செய்து தற்போது அவரை விட்டுப் பிரிந்து வாழ்ந்து வருகின்றார்.

இந்நிலையில், அந்தப் பெண், களுத்துறை, கமகொட குமுது மைதானத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்வையிட வந்துள்ளார்.

இதன்போது அவர் பணிபுரியும் ஆடைத்தொழிற்சாலையின் இளைஞர் ஒருவருடன் நடனமாடிக் கொண்டிருந்தார்.

அப்போது கோபமடைந்த சந்தேக நபர், நடனமாடிக்கொண்டிருந்த இளைஞரின் கழுத்தைக் கத்தியால் அறுத்துள்ளார்.

மேற்படி இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

---

## மைதானத்துக்குள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு, முறையான கவனிப்பின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலையில் உள்ள விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மீசாலை, கரப்பந்துவிளையாட்டுக்கழகமொன்று, கரப்பந்தாட்டத் தொடரை நடத்தி வருகின்றது. தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு நடைபெறுவதாகவிருந்தது. இந்தநிலையில், மாலை 5 மணியளவில் மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்த குழுவொன்று அங்கிருந்தவர்கள் மீதும், வீதியால் சென்றவர்கள் மீதும் தாக்குதலை நடத்தியுள்ளது. அத்துடன் வாள்வெட்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

விடயம் ஊர் மக்களுக்குத் தெரிய வந்ததையடுத்து அவர்கள் ஒன்றுதிரண்டு காடையர்களை மடக்கிப் பிடித்து முறையான கவனிப்பின் பின்னர் அவர்களைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர். தாக்குதலை நடத்திய குழுவில் இருந்த நால்வரே இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் தப்பிச் சென்ற நிலையில், அவர்கள் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர். அத்துடன், அந்தக் குழுவால் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தி, வாள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைதாகிய நால்வரும் 17 மற்றும் 18 வயதுகளையுடையவர்கள் என்றும், தாக்குதல் நடத்த வந்த ஏனையோரும் குறித்த வயதையுடைவர்கள் என்றும், இவர்கள் மந்துவில், எழுதுமட்டுவாழ், உஷன், கொடிகாமம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காடையர்களின் தாக்குதலில் சிவகுமார் ராகுலன் என்ற 25 வயதான இளைஞர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

---

## ரணில் - அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்தியுள்ளார் என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பில் தேடிப் பார்க்கின்றோம். அரச ஊடகமொன்றில் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 3 மணிநேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனமொன்றில் இவ்வாறு நேரம் ஒதுக்கப்படுவதன் நோக்கம் என்ன?

வங்குரோத்து அடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கு வேலைத்திட்டம் அவசியம். சர்வதேச நாணய நிதி ஊடாக கிடைக்கும் கடன் தொகையைக்கூட ஆளுநர் ஊடாக வேறு திட்டங்களுக்கு பயன்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

சஜித் பிரேமதாஸவுக்கு எதிராக பிரசாரம் முன்னெடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும், தேசிய மக்கள் சக்தியும் இணைந்துள்ளன. இவை தொடர்பான தகவல்கள் விரைவில் கிடைக்கப் பெறும்."

– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சறுக்கும் பொருளாதாரம்

பொருளாதாரச் சரிவிலிருந்து நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை கொஞ்சம் கொஞ்சமாக மீட்டுக் கொண்டு வருவதாக அவரது அரசு பீற்றிக்கொள்கின்றது.

சர்வதேச நாணய நித்தியத்துக்கு வாக்குறுதி கொடுத்தபடி நாணயத்தாள்களை புதிது புதிதாக அச்சிட்டு வழக்கத்துக்கு - புழக்கத்துக்கு - தள்ளும் நடைமுறை அடியோடு நிறுத்தப்பட்டு விட்டதாகவும் பெருமையோடு கூறப்படுகின்றது.

அதேசமயம் அந்நிய செலாவணிக் கையிருப்பு கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்டு, அது இந்த அரசின் பொருளாதாரத் துறைச் சாதனை என்று அரசுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் - தம் பட்டம் அடிக்கும் - போக்கும் தொடர்கின்றது.

2022 இல் கடன் மீளளிப்புக்கு வக்கற்ற நாடு என அறிவித்து இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னரான நிலைமை இது. இந்த 26 மாதங்களாக முன்னைய கடன் தவணை தொகைகளோ, நிலுவைகளோ, மீளச் செலுத்தப்படவே இல்லை. கடன் மீளளிப்பை ஆரம்பிக்காத நிலையில், கடனிறுக்க வக்கற்ற நாடு என்ற நிலைமையில் இருந்து மீள இயலாத பின்புலத்தில், மேற்படி பொருளாதார முன்னேற்றம் என்று கணக்குக் காட்டப்படுகின்றது. இல்லை, இல்லை, கணக்கு விடப்படுகின்றது என்பதுதான் உண்மை.

புதிதாக நோட்டுக்களை அடித்து விடுவதற்கு பதிலாக, உள்நாட்டு சந்தையில் தினசரி கடன் வாங்கி குவிக்கப்படுகின்றது. அது பற்றிய தகவல் வெளியாகி அந்தக் கணக்குத் தலையைச் சுற்ற வைக்கின்றது.

நாட்டின் நிலைமை 'வரவு எட்டணா... செலவு பத்தணா... கடைசியில் துந்தணா... துந்தணா...!' என்று என்ற மோசமான கட்டத்தில்தான்.

தினசரி கடன் வாங்கிக் கல்யாணம் என்ற போக்கில்தான் நாட்டின் நிதி நிர்வாகம் கையாளப்படுகின்றது.

இந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் மே இறுதி வரையான காலப்பகுதியில் அரசாங்கம் உள்நாட்டுச் சந்தையில் சுமார் 3,880 பில்லியன் (3 லட்சத்து 88 ஆயிரம் கோடி) ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன எனப்பேராதனைப்பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்திருக்கின்றார்.

இந்த ஐந்து மாதங்களில் சுமார் 3,085 பில்லியன் ரூபா திறைசேரி உண்டியல்களில் இருந்தும், 795 பில்லியன் ரூபா திறைசேரி பத்திரங்களில் இருந்தும் கடனாக பெறப்பட்டுள்ளது.

ஜனவரியில் 878 பில்லியன் ரூபாவும், பெப்ரவரியில் 661 பில்லியன் ரூபாவும், மார்ச் மாதம் 843 பில்லியன் ரூபாவும், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 720 பில்லியன் மற்றும் 779 பில்லியன் ரூபாவும் கடனாகப் பெறப்பட்டுள்ளது.

சராசரியாக ஒரு மாதத்தில் பெறப்பட்ட உள்ளூர் கடன்களின் தொகை 775 பில்லியன் ரூபாவை தாண்டியுள்ளதாகவும், ஒரு நாளில் பெறப்பட்ட கடன்களின் சராசரி தொகை சுமார் 25 பில்லியன் ரூபா (அதாவது தினசரி சராசரியாக 2 ஆயிரத்து 500 கோடி ரூபா) எனவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு அரசாங்கத்தினால் பெறப்படும் உள்ளூர்க் கடன் பணம் இதுவரை பெற்ற ஏனைய உள்ளூர்க் கடன்களை அடைப்பதற்கு பெருமளவில் செலவழிக்கப்படுவாதாகவும் காட்டப்படுகிறது.

இப்படித் திறைசேரிப் பத்திரங்கள் பிற திறைசேரி உண்டியல்கள், பிணை முறிகள் என்ற பெயரில் தொடர்ந்தும் கடன்களை வாங்கித் தள்ளி, கொடுப்பனவுக் கடப்பாடுகளை அதிகரித்துச் சென்றால் நாட்டின் பொருளாதாரம் மீட்சியுறப் போவதில்லை என்பது திண்ணம்.

தேர்தலில் வாக்குச் சுருட்டுவதற்காக கொடையாளி போல வாரி வழங்கும் திட்டங்களை அரசு சுருக்கிக்கொண்டால்தான் மீட்சி கிட்டும்.



# ஊடகவியலாளரின் வீடு மீதான தாக்குதலின் பின்னணியில் இராணுவத்தின் மறைகரங்கள்

## பொலிஸார் அசமந்தப்போக்கு என்றும் சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். அச்சுவேலியில் ஊடகவியலாளரின் வீடு தாக்குதலுக்குள்ளாகி மூன்று தினங்களாகியும் இதுவரை எவரையும் பொலிஸார் கைது செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், குறித்த தாக்குதலின் பின்னணியில் இராணுவத்தின் மறைகரங்கள் உள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

அச்சுவேலியில் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளரின் இல்லத்தை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே சிறீதரன் எம்.பி. இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீண்ட காலத்துக்குப் பின்னர் ஊடகவியலாளரை இலக்கு வைத்து குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்று இன்றுடன் (16) மூன்று நாள்க ளாகியும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸார் ஆகியோர் தாக்குதலாளிகளைத் தேடுகின்றோம், பிடிக்கின்றோம் என்கிறார்கள். எதுவும் நடப்பதாக இல்லை.

இதே ஜனாதிபதியைப் பற்றியோ அரச உயர் அதிகாரிகள் பற்றியோ யாராவது பதிவு போட்டால் ஒரு சில மணிநேரங்களில் கைது செய்யப்படுவார்.

யாழ். மாவட்டத்தில் மூலைக்கு மூலை இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு இருக்கும்போது எவ்வாறு இவர்களுக்குத் தெரியாமல் மோட்டார் சைக்கிள்களில் துணிகரமாக வாள்கள், பொல்லுகளுடன் வர முடிகின்றது.?

வீட்டுக்கு வெளியே நின்ற பஸ், ஓட்டோவைத்தாண்டி ஊடகவியலாளரின் மோட்டார் சைக்கிளை இனங்கண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த விடயத்தைத் திசைதிருப்புவதற்காகத் திருநங்கைகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாட்டின் ஜனாதிபதி பலாலி வசாவிளான் பகுதியில் காணி துண்டு விடுவிப்புக்காக வந்தபோது, காணி விடுவிக்கப்படவில்லை என்று மக்கள் கூடிய நிலையில் அது தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற த.பிரதீபன், க.பரதன் ஆகிய இரண்டு ஊடகவியலாளர்களும் இராணுவத்தினரால் அச்சுறுத்தலுக்குள்ளாகப்பட்டு இராணுவப் புலனாய்வாளர்களால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

அரசு திறந்தவெளி சிறைச்சாலைக்குள் அடக்குமுறைகளை விரிவுபடுத்தி பிரயோகிப்பதையே இதன்மூலம் பார்க்க முடிகின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்." – என்றார்.













# கடலில் மிதந்து வந்த மர்மப் பெட்டியில் தொலைத்தொடர்பு சாதனம் ஒன்று மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ். ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனலைதீவு கடற்பரப்பில் மிதந்து வந்த மர்மப் பெட்டியின் உள்ளே இயங்கு நிலை தொலைத்தொடர்பு கருவி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அனலைதீவு கடற்பரப்பில் மிதந்து வந்த மர்மப் பெட்டியைக் கண்ட அனலைதீவு மீனவர்கள் அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். இதையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறைப் பொலிஸார் அந்தப் பெட்டியை மீட்டனர்.

மீட்கப்பட்ட பெட்டியினுள் இருந்து இயங்கு நிலை தொலைத்தொடர்பு கருவி ஒன்று மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேநேரம் இவ்வாறு மீட்கப்பட்ட வோக்கிடோக்கி பி338 வடிவ வகையைச் சேர்ந்த மோற்றோலா நிறுவனத் தயாரிப்பாகக் காணப்படும் அதேநேரம் அதன் மேல் DCP என எழுதப்பட்ட அடையாளமும் ஒட்டப்பட்டுள்ளது.

# டாக்டர் ஜெயகுலராஜாவுக்கு சுமந்திரன் நேரில் அஞ்சலி

(ந.லோகதயாளன்)



மருத்துவர் ஜெயகுலராஜாவின் பூதவுடலுக்கு தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது காயமடைந்த போராளிகளான சீலன், குமரப்பா, புலேந்திரன் போன்றவர்களுக்கு சிகிச்சையாளத்ததற்காக கைது செய்யப்பட்டு வெலிகடை சிறையில் அடைக்கப்பட்டவர் மருத்துவர் ஜெயகுலராஜா.

இதன்போது குட்டிமணி, தங்கத்துரை, வண பிதா சிங்கராசா, மற்றும் விரிவுரையாளர் நித்தியானந்தன் போன்றவர்களுடன் சிறையில் இருந்து பின் மட்டக்களப்புச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

மட்டக்களப்பு சிறையுடைப்பில் தப்பி இந்தியா சென்று விடுதலைப் புலிகளின் தமிழர் புனர்வாழ்வுக் கழக அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகித்தபோது 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், யோகி போன்றவர்களுடன் பணியாற்றியவரும், விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுக்கு ஆரம்ப காலங்களில் பயிற்சியளித்த மூத்த செயல்பாட்டாளருமாவ்வார்.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய பொறுப்பதிகாரியாக பணியாற்றிய கணுக்கேணி முள்ளியவளையை வசிப்பிடமாக கொண்ட மருத்துவர் ஜெயகுலராஜா நேற்றைய தினம் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் காலமானார்.

முல்லைத்தீவில் அவரது உடலுக்குத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அஞ்சலி செலுத்தினார்.



# நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய பஞ்சதள இராஜகோபுரத்துக்கான அடிக்கல்

யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய பஞ்சதள இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் சங்கு ஸ்தாபனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது....









# கிழக்கு மாகாணத்தின் இரு இடங்களில் புனித ஹஜ் பெருநாள் தொழுகை நேற்று

(பாறுக் ஷிஹான்)

ஈதுல் அல்ஹா புனித ஹஜ் பெருநாள் தொழுகை கிழக்கு மாகாணத்தின் இரு வேறு இடங்களில் சர்வதேச பிறை அடிப்படையில் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று மக்களுக்கான பெருநாள் தொழுகை ஏற்பாடுகள் அக்கரைப்பற்று மைதானத்தில் நடைபெற்றன.



அத்துடன் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியில் பெருநாள் திடல் தொழுகை நடைபெற்றது.

இப்பெருநாள் தினமானது இறை தூதர்களில் ஒருவரான இப்றாஹிம் நபியின் தியாகத்தை நினைவுகூரும் விதமாக இஸ்லாமிய நாள்காட்டியின் பிரகாரம் துல்ஹஜ் மாதம் பிறை பத்தில் ஹஜ் பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

வசதிபடைத்த முஸ்லிம்கள் இஸ்லாத்தின் ஐந்து முக்கிய கடமைகளில் இறுதிக் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக புனித மக்கா சென்று மார்க்கக் கடமைகளில் ஈடுபடுவார்கள்.

உலகின் சகல பாகங்களில் இருந்தும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக புனித மக்கா மாநகரில் மொழி மற்றும் பிரதேச வேறுபாடுகளை கடந்து லட்சக் கணக்கானவர்கள் ஒன்றுகூடி ஹஜ் வழிபாடுகளில் ஈடுபடுவது இந்த தினத்தின் விசேட அம்சமாகும்.













# எந்திரியும் அவரின் சாரதியும் லஞ்சம் பெற்ற போது கைது

## அக்கரைப்பற்றில் சம்பவம்






(பாறுக் ஷிஹான்)

அக்கரைப்பற்றில் கனரக வாகனங்களின் உரிமையாளர் ஒருவரிடம், லஞ்சம் பெற முயற்சித்தார் எனும் குற்றச்சாட்டில் கைதான நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் ஒருவரையும், அவரின் வாகன சாரதியையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களத்தின் அக்கரைப்பற்று பிராந்திய காரியாலயத்தில் கடமையாற்றிவரும் பொறியியலாளர், தன்னிடம் 04 லட்சம் ரூபா லஞ்சம் கோருகிறார் என அக்கரைப்பற்றிலுள்ள கனரக வாகனங்களின் உரிமையாளர் ஒருவர், கொழும்பிலுள்ள லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய கடந்த புதன்கிழமை, அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள நீர்ப்பாசன திணைக்களக் காரியாலயத்தில் வைத்து, நீர்ப்பாசன பொறியியலாளர் கூறியமைக்கு அமைவாக அவரின் வாகன சாரதியிடம், லஞ்சப் பணத்தில் ஒரு பகுதியாக 02 லட்சம் ரூபாவை – கனரக வாகனங்களின் உரிமையாளர் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறு வேடத்தில் காத்திருந்த லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் பொறியியலாளரையும் அவரின் சாரதியையும் கைது செய்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட இருவரையும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை முன்னிலைப்படுத்திய போது, எதிர்வரும் 27ஆம் திகதி வரை, அவர்களை விளக்கமறியவில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வயல் வெளிகளிலிருந்து மண்ணை ஏற்றிக் கொண்டு செல்லும் கனரக வாகனங்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்காமலிருக்கும் பொருட்டு, அந்தக் கனரக வாகனங்களின் உரிமையாளரிடம் மேற்படி பொறியியலாளர் லஞ்சம் கோரினார் எனக் கூறப்படுகிறது.

# எரிபொருள் விலைக் குறைப்பு கடினம் மின்சக்தி, எரிசக்தி அமைச்சு தெரிவிப்பு




உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடைந்துள்ள போதிலும், நாட்டில் எரிபொருள்களின் விலைகளை உடனடியாகக் குறைப்பது கடினமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் பிரகாரம், இலங்கையில் எரிபொருள் விலை குறைப்பு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டுமென அதன் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் வர்த்தகக் குறியீட்டின்படி சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது.

இதன்படி, அங்கு தீர்மானிக்கப்படும் விலைகளுக்கு அமைய இலங்கையில் எரிபொருள் விநியோகிக்கப்பட வேண்டுமெனவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 35 வீதமான மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படுவதால், உலக சந்தை விலைகளுக்கு அமைவாக சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ள முடியாதெனவும் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கடந்த செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் மசகு எண்ணெய் விலை 27 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டம்பரில் ப்ரெண்ட் சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 94 அமெரிக்க டொலராக காணப்பட்டது.

தற்போது 74 டொலராக குறைவடைந்துள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.




# தேசிய அருங்காட்சியகத்தில் 9 கோடி ரூபா நட்டம் கணக்காய்வாளர் அறிக்கையில் வெளிக்கொணர்வு

கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் தீயணைப்பு கட்டமைப்பை நிறுவுவதில் சுமார் 9 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தேசிய அருங்காட்சியகத் திணைக்களத்தின் 2023 ஆண்டு அறிக்கையை அடிப்படையாக கொண்டு இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தீயணைப்பு கட்டமைப்பை நிறுவுதற்கான பொறுப்பு தகுதியற்ற ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட்டமையே நட்டம் ஏற்படுவதற்கான காரணமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முதலாவது ஒப்பந்ததாரர் முறையாக செயற்படாததால் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு மற்றுமொரு தரப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

2021 ஜனவரியில் இதற்காக முதலாவது ஒப்பந்ததாரர் 10 கோடி ரூபா மதிப்பீட்டை வழங்கியுள்ளார்.

இதில், 4 கோடிக்கும் அதிகமான கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையில் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்பின்னர், 18 கோடி ரூபா மதிப்பீட்டில் இடைநிறுத்தப்பட்ட பணிகள் கடந்த ஆண்டு டிசம்பரில் இரண்டாவது ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சுமார் 9 கோடி ரூபா கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மன்னாருக்கென கலாசார மண்டபம் ஜனாதிபதியிடம் செல்வம் கோரிக்கை



(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்திற்கு ஒரு கலாசார மண்டபத்தை அமைத்துத் தருமாறு ஜனாதிபதியிடம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்தார்.

“உறுமய” தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஜனாதிபதி முன்னிலையில் உரையாற்றும்போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் உரையாற்றுகையில் –

“மன்னார் மாவட்ட வைத்தியசாலை மிக மோசமாக உள்ளது. எந்தவொரு வளர்ச்சியும் இல்லாமல் இருக்கிறது. அதேபோல் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையையும் அபிவிருத்தி செய்வதற்கான வசதிகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல் மன்னார் மாவட்டத்தில் பல காணிகள் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அழுத்தங்களை எதிர்கொள்கின்றன. இங்கு வந்திருக்கின்ற ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதோடு, இப்பகுதி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மன்னார் மாவட்டத்திற்கு ஒரு கலாசார மண்டபத்தை அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.” என்றார்.



# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,200 ரூபா மாத்திரமே வழங்க முடியும்

## தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் தெரிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அதிகபட்ச சம்பளமாக 1,200 ரூபா மாத்திரமே வழங்க முடியும் என இலங்கைத் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லயனல் ஹேரத் தெரிவித்தார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

”மேலதிக தேயிலைக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் தயாராகவுள்ளன. முன்னர் 1,000 ரூபாவாக காணப்பட்ட சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிப்பதன் ஊடாக 70 சதவீதம் சம்பள அதிகரிப்பு இடம்பெறும்.

தொழிற்துறையில் உள்ளவர்கள் வேதனத்தை அதிகரிக்குமாறு எந்தவித ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. முழுமையாக அரசியல் நோக்கத்திற்காக இந்த செயற்பாடு இடம்பெறுகிறது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஓரளவு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துவது நியாயமான விடயமாக கருத முடியும். எனினும் 1,700 ரூபாவாக வேதனத்தை அதிகரிக்க வேண்டும் என அரசாங்கம் வலியுறுத்துவதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 1,000 ரூபா சம்பளத்தை கொண்டு வாழ்க்கையை முன்னோக்கி செல்வதற்கு பழக்கமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் தொழிற்துறைக்கு அமைய நாளாந்த வேதனமாக 1,200 ரூபா மாத்திரமே செலுத்த முடியும்.”– என்றார்.

# சிறுவர்களிடையே பரவும் இன்புளுவென்சா வைரஸ்



இன்புளுவென்சா வைரஸ் தற்போது சிறுவர்களிடையே பரவி வருவதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் சுவாசக் குழாயைப் பாதிப்பதன் காரணமாக காய்ச்சல், தொண்டை வலி, உடல் வலி, தலைவலி, இருமல், சோர்வு போன்ற அறிகுறிகள் சிறுவர்களிடையே காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிகுறிகள் சிறுவர்கள் மத்தியில் காணப்படுமாயின் முறையான மருத்துவ சிகிச்சையைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இன்புளுவென்சா வைரஸ் எளிதில் பரவும் திறன் கொண்டதால் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# ரஜினிகாந்தை சந்தித்தார் செந்தில் தொண்டமான்

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நடிகர் ரஜினி காந்தை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று விஜயவாடாவில் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் 'மலையகம் 200' நினைவு அஞ்சல் முத்திரையை நடிகர் ரஜினிகாந்திற்கு வழங்கி வைத்துள்ளார். இதுதொடர்பில் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில் –

"எனது குழந்தைப் பருவத்திலிருந்தே அவரது திரைப்படங்களை ரசித்து வந்துள்ள எனக்கு இன்னும் அதன் ஆற்றல்மிக்க வலுவான அதிர்வை உணர முடிகின்றது."
– என்று குறிப்பிட்டுள்ளார்.



# இந்தியாவிலிருந்து வருகைத்தரும் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைத்தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் கடந்த 13ஆம் திகதி வரையான காலப் பகுதியில் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியாவில் இருந்து 12 ஆயிரத்து 144 பேர் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர்.

அத்துடன், பிரித்தானியாவில் இருந்து 3,475 பேரும், சீனாவில் இருந்து 3,095 பேரும், ஆஸ்திரேலியாவில் இருந்து 2,272 பேரும் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.





# மன்னார் மடு தேவாலயத்தை இடையூறின்றி வழிபடுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

மன்னார் – மடு தேவாலயத்திற்கு வருவோர் இடையூறின்றி வழிபாடுகளில் ஈடுபடுவாற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

மன்னார் மாவட்டச் செலயகத்தில் நேற்று நடைபெற்ற விசேட மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மடு தேவாலயத்தை வழிபட வருவோருக்காக தேவாலய நுழைவு வீதியின் இரு புறங்களையும் தூய்மைப்படுத்தி அபிவிருத்தி பணிகளை செய்யுமாறு இராணுவத்தினருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார். அந்த பணிகளுக்காக மன்னார் மறை மாவட்ட ஆயரின் பிரதிநிதி ஒருவர், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் பொலிஸாரை தொடர்பு படுத்திக்கொண்டு செயற்படுமாறும் அறிவுறுத்தினார்.

எதிர்வரும் நாள்களில் நடக்கவிருக்கும் மடு தேவாலயத்தின் உற்சவத்திற்கு முன்னதாக தூய்மைப்படுத்தல் பணிகளை நிறைவு செய்யுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

மன்னாரின் அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான விசேட மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில், பிரதேச அரசியல் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“மூன்று தசாப்த கால யுத்தத்திற்கு முகம் கொடுத்த மன்னார் மாவட்டம் இன்று வளர்ச்சி கண்டு வருகிறது. இம் மாவட்டத்தின் விரிவான அபிவிருத்தி மூலம் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும். இம்மாவட்டத்தில் சுற்றுலா, மீன்பிடித் தொழில் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை பெற்றுகொள்வதற்கான வாய்ப்புக்களும் அதிகம் உள்ளன.

அதேபோல் இப்பகுதிகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகமாகவே உள்ளன. தேவை மிகுதியான வலுசக்தியை இந்தியாவுக்கு விற்பனை செய்வது குறித்து அந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

வடமாகாணமானது பசுமை சக்தியை பெருமளவில் கொண்டுள்ளது. குளங்கள் மற்றும் காற்றாலைகள் மற்றும் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையங்களை அமைப்பதன் மூலம் அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அந்த சக்தியை இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் விற்பனை செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை பெற்றுக்கொள்ளவும் முடியும். பசுமை வலுசக்தி மற்றும் பச்சை ஹைட்ரஜன் என்பவற்றை கொண்டு பசுமை பொருளாதாரத்தையும் உருவாக்க முடியும்.

மன்னாரில் புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி எதிர்காலத்தில் வழங்கப்படும். புத்தளம் – மன்னார் வீதியை திறப்பது குறித்தும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க முடியும்.

மன்னார் வைத்தியசாலைக்கு சி.ரி.ஸ்கேன் இயந்திரம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன விவசாயத்தை உருவாக்குவதற்கான முறையான திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். அதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு

தொடர்ச்சி▼









# மன்னார் மடு தேவாலயத்தை இடையூறின்றி வழிபடுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

தொடர்ச்சி▲

அபிவிருத்திக் குழு கூடி கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்குமாறு அறிவுறுத்துகிறேன். இந்தப் பிரதேசத்தில் உள்ள குளங்களைப் பாதுகாப்பதற்கும் மல்வத்து ஓயா திட்டத்தில் இருந்து மன்னாருக்கு வரும் நீரைப் பாதுகாப்பதற்கும் முறையான வேலைத்திட்டமொன்று விரைவாகத் தேவைப்படுகிறது.

அடுத்த ஐந்து தசாப்தங்களுக்குள், உலர் வலய பகுதிகள் மழை அதிகரிக்கும் என்றும், வறண்ட பகுதிகளுக்கு மழை கிடைக்காமல் போகும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. அதற்கான தீர்வுகளை இப்போதிருந்தே தேட ஆரம்பிக்க வேண்டும்.

மடு மற்றும் சிவனொளிபாத மலை போன்ற புனித தளங்களின் நுழைவு வீதிகள் அவற்றை வழிப்பட வருவோருக்காகவே அமைக்கப்பட்டுள்ளன. எனவே, அங்கு வரும் யாத்ரீகர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி முப்பது லட்சம் அபராதம் விதிப்பது நியாயமான செயலாக இருக்காது.

மன்னார் மறை மாவட்ட ஆயரின் பிரதிநிதி ஒருவர், வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் பொலிஸாரை தொடர்புபடுத்திக்கொண்டு மடு தேவாலயத்தை வழிபட வருவோருக்கான தேவாலய வீதியின் இரு புறங்களையும் தூய்மைப்படுத்தி அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள வேண்டும். எதிர்வரும் மடு தேவாலய உற்சவத்திற்கு முன்னதாக அந்த பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எனவே, மன்னார் மறைமாவட்டம், வனப் பாதுகாப்பு திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவத்தின் பிரதிநிதிகள் இணைந்து இந்த வீதியை சுத்தம் செய்து அபிவிருத்தி செய்ய வேண்டும். இந்த நடவடிக்கைகள் மடு தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவிற்கு முன்னதாக நிறைவுபெற வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள சோதனைச் சாவடியை ஒரேயடியாக அகற்ற முடியாது. பாதுகாப்புப் படையினருடன் கலந்துரையாடி அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். மன்னார் மாவட்டத்திற்கு தேவையான அபிவிருத்திகளை வழங்குவோம். இந்த ஆண்டு அதற்கான அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

மன்னாரைச் சுற்றி முன்னெடுக்கப்படவிருக்கும் விரிவான அபிவிருத்தி தொடர்பில் உங்களை தெரியப்படுத்த வேண்டியிருந்தது. அதனால் எவரிடத்திலும் நீங்கள் சிக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது. இப்பிரதேசத்தில் விரிவான அபிவிருத்திகளை மேற்கொண்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் மாவட்டமாக மன்னார் மாவட்டத்தை கட்டியெழுப்புவோம்" – என்றார்.









# எந்தவொரு சுற்றுச்சூழல் சட்டத்தையும் தலைகீழாக மாற்ற வேண்டாம் என ஜனாதிபதி அறிவுறுத்தினார்

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தகவல்



சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக இயற்றப்பட்ட எந்தவொரு சட்டத்தையும் எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். தற்போதைய சுற்றாடல் சட்டம் புதுப்பிக்கப்பட்டு காலநிலை மாற்றச் சட்டத்துடன் புதிய சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்."

– இவ்வாறு மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

'இரண்டு வருட முன்னேற்றம் மற்றும் எதிர்காலம்' என்ற தலைப்பில் நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சுற்றாடல் அமைச்சின் இரண்டு வருட முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு குறித்து கருத்து தெரிவிக்கும் போது எமது அமைச்சின் செயற்பாடுகள் ஏனைய அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் போன்று ஒரேயடியாக வெளித்தெரிவதில்லை. ஆனால், ஓர் அமைச்சு என்ற வகையில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க பல பணிகளைச் செய்துள்ளோம். மேலும் பல முக்கிய பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன.

அண்மையில் நடைபெற்ற சுற்றுச்சூழல் தினத்துடன் இணைந்து, நாடளாவிய சுற்றுச்சூழல் வாரத்தை அறிவித்தோம். அதைக் குறிக்கும் வகையில், நாடு முழுவதும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மரம் நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தற்போதைய 29 வீத காடுகளின் அளவை 2030 இற்குள் 32 வீதமாக உயர்த்த எதிர்பார்க்கிறோம்.

தொடர்ச்சி▼









# எந்தவொரு சுற்றுச்சூழல் சட்டத்தையும் தலைகீழாக மாற்ற வேண்டாம் என ஜனாதிபதி அறிவுறுத்தினார்

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தகவல்






தொடர்ச்சி▲

இதற்காக குறிப்பாக காடுகளிலுள்ள வெற்றிடப் பகுதிகளில் மரம் நடுவதற்கு புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 'மரத்துக்கு ஒரு செடி 'திட்டத்தின் கீழ் அகற்றப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் பதிலாக மரம் நடப்பட்டுள்ளது.

அத்துடன், சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிக கவனத்துடன் செயற்பட்டு வருகின்றார். எனவே, சுற்றுச்சூழலை பாதுகாக்க இயற்றப்படும் எந்த சட்டத்தையும் எக்காரணம் கொண்டும் தலைகீழாக மாற்ற வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதைய சுற்றுச் சூழல் சட்டம் புதுப்பிக்கப்பட்டு, காலநிலை மாற்ற சட்டத்துடன் புதிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மேலும், நாட்டின் பெறுமதிமிக்க கனிம வளங்களை, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் அவசர வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது." – என்றார்.

# தமிழ்ப் பேசும் சிறுபான்மை சமூகங்களை சார்ந்து ஜனாதிபதித் தேர்தலில் புதிய வியூகத்துடன் பஷீர்

உற்பத்தி திறன்கள் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் அடுத்த வாரங்களில் நாட்டுக்கு திரும்பி வருகின்றார்.

தனிப்பட்ட வகையில் சில காலம் வெளிநாடு சென்றிருந்த இவர் வரவுள்ள ஜனாதிபதி தேர்தல் குறித்த விவகாரங்கள் சூடு பிடித்துள்ள நிலையில் ஒட்டுமொத்தமாகத் தமிழ், முஸ்லிம், மலையக சமூகங்கள் சார்ந்து ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்காக வருகின்றார் என்று அறிய கிடைக்கின்றது.

குறிப்பாக போருக்கு பின்னரான இலங்கையில் தமிழ், முஸ்லிம், மலையக சமூகங்களை அரசியல் அடிப்படையில் இணைப்பதற்கான பொன்னான வரலாற்று வாய்ப்பாக இத்தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்பது அவருடைய வியூகத்தின் அடிப்படை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக விரைவில் ஊடக அறிக்கை ஒன்றை பஷீர் சேகுதாவுத் மும்மொழிகளிலும் வெளியிடுகின்றார் என்றும் தெரிய வருகிறது.



# மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு நடவடிக்கை




மியன்மார் சைபர் முகாம்களில் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 49 இலங்கையர்களில் சிலரை எதிர்வரும் நாள்களில் விடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்துள்ளார்.

மியன்மார் விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பிய நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மியன்மார் சைபர் முகாம்களில் பல்வேறு நாடுகளை சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தாரக்க பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அதில் 53,000 பேர் சீனர்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்துள்ளார்.

# புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்!



கலாபூஷணம் பரீட் இக்பால், யாழ்ப்பாணம்.

தக்பீர் முழங்குகிறது. அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்.... அல்லாஹு அக்பர்...வலில்லாஹில் ஹம்து.

தக்பீர் முழங்குகிறது. ஹஜ்ஜுப் பெருநாள் உதயமாகிறது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு எத்தனையோ காலங்களாக தமக்கு ஒரு பிள்ளையில்லை என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்வுக்காகப் பலியிடத் துணிந்த இப்ராஹிம் (அலை) அவர்களின் உயர்வான ஒப்பற்ற மனதையும் ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதி படைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாகப் புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாக வேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண்முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம்வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றன.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேச அளவிலான வருடாந்த மாநாடாகக் கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.

நபி (ஸல்) யின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள் கூட இந்த வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணைவைப்போடு மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்து வந்தது. இது ஒரு வழிபாடு என்பதை விடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்று கூடும் வியாபார சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி (ஸல்) வருகைக்குப் பின் இந்த நிலை முற்றாக மாற்றப்பட்டு இணைவைப்பும் மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்று கூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப் பெற்றது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது. ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது. நபி (ஸல்) பெருநாள் தினத்தில் பள்ளிவாசலுக்குச் செல்லும் போது ஒரு வழியால் சென்று மற்றுமொரு வழியால் திரும்பி வருவார்கள். இதன் மூலம் பலரைச் சந்திக்கவும் ஏழைகளுக்கு உதவி புரியவும் கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள்.

பெருநாள் தினத்தில் சகோதர மதத்தவர்களுடன் புரிந்துணர்வு கருதிய ஒன்று கூடல்களை நடத்தலாம். இதன் மூலம் இரு சாரார் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயங்கள் நீங்கிப் பிரதேச மற்றும் தேசிய அமைதிக்கு வழியேற்படும்.

பெருநாள் தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு. ஒரு ஊரில் அல்லது மஹல்லாவில் வாழும் முஸ்லிம்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாக பிரியாமல் சகலரும் ஒன்று சேர்ந்து ஒரு திறந்த வெளியில் அல்லது மைதானத்தில் இது முடியாத போது ஒரு பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நடத்த வேண்டும்.

பெருநாள் தொழுகையானது ஆண். பெண் இரு சாராரும் தொழலாம் என்று இஸ்லாம் கூறுகின்றது. மாதவிடாய் உள்ள பெண்களும் பெருநாள் தொழுகை நடக்கும் மைதானத்துக்குச் செல்ல முடியும். மாதவிடாய் உள்ள பெண்கள் தொழும் இடத்தை விட்டு விலகி பெண்களின் பின்னால் இருத்தல் வேண்டும். மாதவிடாய் உள்ள பெண்கள் தக்பீர் கூறவும் துஆ கேட்கவும் முடியும்.

ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை முடிந்தவுடன் இமாம் நிகழ்த்தும் குத்பா உரையை அனைவரும் கேட்க வேண்

தொடர்ச்சி▼

# புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்!

**தொடர்ச்சி▼**

டும். தொழுகையை போன்றே குத்பாவும் ஒரு இபாதத் என்பதை மறக்கலாகாது. இவ்வாறு ஒரு இமாமுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் மூலம் முஸ்லிம் சமுதாய அமைப்பு வலுப்பெறுவதோடு தனிப்பட்ட ஒவ்வொரு முஸ்லிமும் பலவகையான நன்மைகளையும் அல்லாஹ்வின் அருளையும் பெறும் வாய்ப்பை பெறுகின்றனர். ஹஜ்ஜுப் பெருநாள் ஒரு தியாகப் பெருநாளாகும் எனவே ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் நபி (ஸல்) காலைச்சாப்பாடு சாப்பிடாமல் பெருநாள் தொழுகைக்கு புறப்படுவார்கள். எனவே நாம் காலைச்சாப்பாட்டை சாப்பிடாமல் பெருநாள் தொழுகைக்கு புறப்பட வேண்டும். பெருநாள் தொழுகை முடிந்ததும் தான் சந்திக்கும் சகோதரர்களுக்கு "தகப்பலல்லாஹு மின்னி வமின்க" உங்களுடையதும் என்னுடையதும் நற்செயல்களையும் வாழ்த்துக்களையும் அல்லாஹ் அங்கீகரிப்பானாக! என்று கூறி வாழ்த்து தெரிவிப்பது சுன்னத்தாகும்.

பெருநாள் தினங்களில் உறவினர்கள், நண்பர்கள், மார்க்க ஊழியர்கள் அனைவரையும் கண்டு பேசி உபசரித்து, வாழ்த்துக் கூறி தங்களிடையே பற்றையும் பாசத்தையும் அன்பையும் ஆதரவையும் மென்மேலும் அதிகரித்துக் கொள்வதும் சிறந்த செயலாகும்.

புனித ஹஜ் பெருநாள் தினத்திலும் அதைத் தொடர்ந்துவரும் துல்ஹஜ் மாதம் 11,12.13 ஆகிய தினங்களிலும் வசதியுள்ள ஒரு முஸ்லிம் நிறைவேற்றும் மிகச் சிறந்த வணக்கமே உழ்ஹிய்யா (குர்பான்) கொடுப்பதாகும். ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற மிருகங்களை அறுத்து தானும் உண்டு பிறருக்கும் புசிக்கக் கொடுத்து அல்லாஹ்வின் அன்பைப் பெறும் நற்செயலே உழ்ஹிய்யா ஆகும்.

ஸகாத் கொடுப்பவர்கள்தான் உழ்ஹிய்யா கொடுக்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. வசதியுள்ளவர்கள் அனைவரும் கொடுக்க வேண்டும். ஒட்டகம் அல்லது மாடாக இருந்தால் ஏழு பேர் சேர்ந்து கூட்டாக கொடுக்கலாம். இது ஆண்களுக்கு மட்டும்தான் என்பதில்லை. பெண்களும் தாராளமாக இதில் பங்கேற்கலாம். உழ்ஹிய்யா கொடுப்பவரே அறுப்பது மிகவும் சிறந்தது. அப்படி இல்லையென்றால் வேறொருவருக்கு பொறுப்பு கொடுக்கவும் முடியும். அவர் அந்த இடத்துக்குச் சமூகமளிப்பது சிறந்தது. தைரியமிருந்தால் பெண்களும் அறுக்கலாம். அறுப்பதற்கு முன் அல்லாஹ்வின் பெயர் சொல்லப்பட வேண்டும். நாம் அறுக்கின்ற போது "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூற வேண்டும்.

"உங்களில் ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கும் நிலையில் துல்ஹஜ் மாதம் பிறந்ததும் நகம், முடி எதையும் வெட்ட வேண்டாம்" . ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கும் நிலையில் நகம் அல்லது முடி ஏதாவது ஒன்றை வெட்டினால் அவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டும்.

உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றுகையில் பிற சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை பாழ்படுத்தாத வகையில் அதை நிறைவேற்றுவது முக்கிய அம்சமாகும் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. நம் மதக் கிரியைகளை நிறைவேற்றும் போது பிற மதத்தினரின் அதிருப்தியையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்வது நல்லதல்ல.

மிருகங்களை அறுப்பதற்கும் இறைச்சியைப் பெற்றுகொண்டு சுற்றாடலுக்கு மாசு ஏற்படாத வகையில் கழிவுப் பொருள்களை அழித்தொழிப்பதற்கும் போதிய இடவசதி இருக்கும்வரை இந்த நடைமுறையில் பிரச்சினைகள் தலைதூக்குவதில்லை. பல்லின மக்களும் கலந்து வாழும், இடப்பற்றாக்குறை நெருக்கடிமிக்க பகுதிகளில் மிருகங்களை அறுப்பதும், அவற்றின் கழிவுகளை அப்புறப்படுத்துவதும் எப்போதுமே சர்ச்சைக்குரியனவாகின்றன.

உழ்ஹிய்யா கொடுக்கும் விடயத்தில் பல்லின மக்கள் வாழும் எமது நாட்டில் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மிருகங்களை அறுப்பதற்காக கொண்டுசெல்லும் போது அதற்கு இம்சை செய்வதோ, அறுத்ததன் பின் இரத்தம் வடியும் நிலையில் பாதைகளில் இறைச்சியைத் தூக்கிச் செல்வதோ கூடாது. அறுத்த பிராணியின் கழிவுகளான தோல், எலும்புகள், கொம்பு, சாணம் போன்றவற்றை துர்நாற்றம் வீசும் நிலையில் பாதையோரங்களில் வீசுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அவைகளை குழி தோண்டிப் புதைத்து விட வேண்டும். ஆனால் நம் சகோதரர்கள் அவ்வாறு செய்யத் தவறிவிடுகின்றனர். இது கவலைக்குரிய விடயமாக உள்ளது. இது போன்ற தவறுகளை விடுவதால்தான் பிற சமூகத்தினரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதை உழ்ஹிய்யா கொடுக்கும் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்படுவது கட்டாயக் கடமையாகும்.

எமது நாட்டின் இறைச்சிக் கடைகள் தொடர்பான உள்ளூராட்சி அமைப்புகளுக்கான கட்டளைச் சட்டம் அமுலில் உள்ளதோடு அதன் பிரகாரம் இறைச்சியின் பொருட்டு கால்நடைகளைக் கொல்வதற்குப் பாதுகாப்பான கொள்கலன்களிலேயே அறுக்கப்பட வேண்டும் என்ற நியதியும் உண்டு. உழ்ஹிய்யாவின் பொருட்டு மிருகங்களை அறுப்பதற்காக அவ்வப் பிரதேச உள்ளூராட்சி அமைப்புகளின் அதிகாரிகளுடன் பேசி, அதற்காகச் செலுத்த வேண்டிய சிறு கட்டணங்களையும் செலுத்தி, பாதுகாப்பான முறையில் சுற்றாடலுக்கும் சுற்றாடலிலுள்ள பிற சமூகத்தவர்களுக்கும் தொந்தரவில்லாதவாறு இந்தக் கடமையை நாம் நிறைவேற்ற வேண்டும்.

இறைச்சிக்காக ஆடு, மாடுகளை கொல்வது எமது நாட்டு சட்டத்திலுள்ள விடயமாகும்.

வீடுகளில் அல்லது வைத்தியசாலைகளில் நோயாளர்களாக துன்பத்துடன் பெருநாளை கொண்டாட முடியாதவர்களாகப் பெருநாள் பொழுதை கழிக்கிறவர்களிடமும் சிறைச்சாலையில் துன்பப்படும் கைதிகளிடமும் சென்று சந்தித்து சுக துக்கங்களை விசாரித்து உணவுகள், பழங்கள், பலகாரங்கள் வழங்கி மனதுக்கு ஆறுதல் அளிக்கலாம். இலவச வைத்திய முகாம்கள் அமைத்து நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கலாம்.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். பெருநாள் காலங்களில் கட்டியெழுப்பும் முன்மாதிரியான நிகழ்ச்சிகளை அந்தந்த ஊர்களின் கழகங்கள், ஸ்தாபனங்கள், அமைப்புக்கள் ஏற்பாடு செய்வது வரவேற்கத்தக்க விடயமாக அமையும் என்பது சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யும் பெருநாளாக அமைய அல்லாஹ்வை வேண்டுகிறோம்.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மன சந்தோஷத்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம். பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்துப் புரிந்துணர்வுடன் உழ்ஹிய்யா கொடுப்போம் புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.

# நாட்டை முதல் தரத்துக்கு உயர்த்தும் பணியில் அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்படுவோம்

## ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் சஜித் பிரேமதாஸ

நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் அனைவரும் ஒன்றிணைந்து ஈடுபட்டு நமது நாட்டை உலகில் முதலாவது இடத்துக்குக் கொண்டு செல்லும் பயணத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அதற்காக அனைவரும் ஒரே புரிந்துணர்வுடன் இந்தத் தியாகத் திருநாளான ஈதுல் அல்ஹா பெருநாளை சகோதரத்துவத்துடன் கொண்டாடுவோம்.

இவ்வாறு இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ தெரிவித்துள்ளார்.

புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களின் மிக முக்கியமான கலாச்சார மற்றும் மதப் பண்டிகையாகக் கருதப்படும் ஈதுல் அல்ஹா பெருநாளை முன்னிட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் இத் தருணத்தில் அதன் முக்கிய விழுமியங்களைப் பற்றி நினைவில் கொள்வது சாலச் சிறந்தது என உணர்கின்றேன்.

வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே, மக்கள் பல்வேறு மத தியாகங்களுக்காகக் கூட்டாக கூடினர. அதில் தங்கள் சொந்த மதத்துடன் தொடர்புடைய மரபுகள் பாதுகாக்கப்பட்டு அவற்றுக்கிடையே தொடர்பு



களை ஏற்படுத்திக் கொண்டனர். இஸ்லாத்தில் புனிய ஹஜ் யாத்திரையும் அவ்வாறான ஒன்றாகும்.

இஸ்லாத்தின் ஐந்து பெரும் கடமைகளில் ஐந்தாவது கடமையாகக் கருதப்படும் ஹஜ் யாத்திரை இறைவன் மீதான பக்தி மற்றும் நம்பிக்கையை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துவதாகும். அந்த நம்பிக்கையின் காரணமாக, உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான இஸ்லாமியர்கள் ஒரே நோக்கத்துடன் ஒரே நேரத்தில் புனித மக்காவில் ஒன்று கூடி, மனிதகுலத்தின் எதிர்பார்ப்பான சகோதரத்துவக் கூட்டு மதிப்பைப் போற்றுகிறார்கள்.

மேலும் இஸ்லாத்தின் தத்துவத்தின் அடிப்படையில் மனித குலத்தை போற்றும் ஒரு சந்தர்ப்பமாகவும் இந்த ஈதுல் அல்ஹா பெருநாளைக் கருதலாம். இது சமூக நல்லிணக்கத்தின் பெருமையை உலகுக்கு எடுத்துரைக்கும் ஒரு முக்கியமானதும் தனித்துவமானதுமான தியாகத் திருநாளாகும். மதத்தின் மூலம், மனித சமுதாயம் மனித நேயத்தால் முழுமையடைந்து நல்ல சமுதாயத்தை உருவாக்கும் என்பது நம்பிக்கை. ஒவ்வொரு மதத்திலும் கலாச்சாரத்திலும் நடக்கும் இத்தகைய கொண்டாட்டங்கள் மூலம் அந்த நல்ல நோக்கம் நினைவு கூறப்படுகின்றது.

எனவே, பல்வேறு பேதங்கள் மூலம் மனித இனத்துக்கிடையே மோதல்களை உருவாக்குவதற்குப் பதிலாக, பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவர்களாகவும் சகோதர வாஞ்சையுடன் நேசிக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தையும் இது நமக்கு சுட்டிக் காட்டுகிறது.

வங்குரோத்தாகியுள்ள நம் நாட்டுக்கும் இது ஒரு சிறந்த உதாரணமாக நான் பார்க்கிறேன். இனம், மதம், சாதி, குலம், கட்சி, அந்தஸ்து என்ற பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் ஈடுபட்டு நமது நாட்டை உலகில் முதலாவது இடத்துக்கு கொண்டு செல்லும் பயணத்துக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

அதற்காக அனைவரும் ஒரே புரிந்துணர்வுடன் இந்தத் தியாகத் திருநாளான ஈதுல் அல்ஹா பெருநாளை சகோதரத்துவத்துடன் கொண்டாடுவோம்.- என்று தெரிவித்துள்ளார்.

# சமூக நாகரீகங்களுக்கான முகவாசலை உருவாக்கியவர் இறைதூதர் இப்றாஹீம்!

## வாழ்த்துச் செய்தியில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்!

இலட்சியப் போக்கில் வாழ்வை செம்மைப்படுத்திய இறைதூதர் இப்றாஹிம்மின் முன்மாதிரிகள், சகலருக்கும் சிறந்த வழிகாட்டுதல்களாக உள்ளன. சமூக நாகரீகங்களுக்கான முகவாசலை உருவாக்கியவர் இறைதூதர் இப்றாஹீம்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் புனித ஹஜ்ஜுப் பெருநாள் (ஈதுல் அழ்ஹா) வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னரே சிறந்த நாகரீகத்தைக் கட்டியெழுப்பும் இலட்சியத்தில் பயணித்தவர் இறைதூதர் இப்றாஹிம். அவரின் முன்மாதிரிகள் உலகம் உள்ளவரைக்கும் சிறந்த வழிகாட்டுதல்களாக இருக்கும். மானிட நாகரீகத்துக்கான முகவாசல்களைத் தனது மகன்களூடாக ஆரம்பித்த இலட்சியப் புருஷர் இறைதூதர் இப்றாஹிம். இஸ்ஹாக்



(அலை) ஊடாக பாலஸ்தீனத்திலும் இஸ்மாயில் (அலை) மூலமாக மக்காவிலும் சமூக நாகரீகத்துக்காக அவரிட்ட அடித் தளங்கள்தான் இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் யூதம் என உலகின் பெரும்பான்மை மதங்களைத் தோற்றுவித்துள்ளன.

இலட்சியத்தில் திடகாத்திரம், செயற்பாடுகளில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டதால் இறைவன், இறைதூதர் இப்றாஹிமின் பயணங்கள், புலப்பெயர்வுகளில் வெற்றியைக் கொடுத்தான். நவீன உலகில் நாம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்வதற்கு இதே மாதிரியான திடகாத்திரம் மற்றும் நம்பிக்கைகள் அவசியம். சோதனைகள், இடர்கள் எல்லாம் தற்காலிகமானதே. இறைதூதர் இப்றாஹிமின் வழியில் செயற்பட்டால், இவற்றை தகர்த்தெறியும் தைரியம் எமக்கு கிடைக்கும்.

ஹஜ் கிரியைகள் இன்னும் "குர்பான்" கடமைகளை நிறைவேற்றும் போது, சக சமூகங்களின் உணர்வுகளை கௌரவிக்கும் வகையில், முஸ்லிம்கள் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறான புரிதல்கள்தான், சமூக மற்றும் சமயங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும்.

ஒரே தந்தையின் வழித்தோன்றல்களில் வந்த வேதங்களான யூதர்களும் முஸ்லிம்களும் இன்று பலஸ்தீனத்தில் மோதிக்கொள்வது, மானிட நேயர்களை பெரும் கவலைக்கு உட்படுத்தியுள்ளது.

இந்த நிலைமை நீங்க நாம் அனைவரும் பிரார்த்திப்பது அவசியம். மாற்று மதங்களை புரிந்து கொள்ளும் மனோபக்குவமே உலகின் நிரந்தர அமைதிக்கு வழிகோலும்.- என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஏகத்துவத்துக்கு எதிரான ஏகாதிபத்திய சதிகள் ஒழிவதற்கு நாம் ஒன்றுபடுவோம்!

### புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அசாத் சாலி தெரிவிப்பு

ஏகத்துவத்துக்கு எதிரான ஏகாதிபத்திய சதிகள் ஒழிவதற்கு நாம் ஒன்றுபடுவோம்.புனித ஹஜ்ஜுப் பெருநாளை (ஈதுல் அழ்ஹா) கொண்டாடும் சகலரது வாழ்விலும் மகிழ்சி பொங்க பிரார்த்திப்போம்.

இவ்வாறு மேல் மாகாண முன்னாள் ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இறைதூதர் இப்றாஹிம் நபியின் தியாகங்கள் இன்றளவும் நினைவு கூரப்படுகின்றன. சமுதாயக் கட்டமைப்பில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் இலட்சியத்தில்தான் அவரது வாழ்க்கையும் இருந்தது. அவரின் குடும்பத்தினர் செய்த அர்ப்பணிப்பும் இறைதூதர் இப்றாஹிமின் தியாகங்களும் மனுக்குலத்தின் மறுமலர்ச்சிக்கே வித்திட்டன.

எந்தக் கருமமானாலும் இறை திருப்திக்காகச் செய்தவர் அவர்.



இறைவனின் ஏவல்களை அடியொற்றி நடந்த அல்லாஹ்வின் நண்பர் (கலீலுல்லாஹ்) என்ற சிறப்புப் பெயரும் இவருக்குண்டு. ஐயாயிரம் வருடங்களைக் கடந்துள்ள இப்றாஹிம் நபியின் வழிகாட்டல்களை, அணுவளவும் பிசகாமல் முஸ்லிம்கள் பின்பற்றுவது இறைவனின் திருப்தியை நாடியே.

சிறுபான்மை சமூகத்தினராக வாழும் நாம், குர்பான் கடமைகளில் ஏனைய மதத்தினர் மனம் புண்படாமல் நடந்துகொள்ள வேண்டும். போயா, பௌர்ணமி காலங்களில் மிகக் கவனமாகச் செயற்பட்டு, இஸ்லாத்தின் உன்னத இலட்சியத்தை ஏனைய சமூகத்தினருக்கு வெளிப்படுத்த வேண்டும். மிருகவதையாகப் பிறர் சிந்திக்கும் அளவுக்கு "குர்பான்" கடமைகளைப் பின்பற்றக் கூடாது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் லட்சக்கணக்கில் செலவிட்டு புனித ஹஜ்ஜுக்கு சென்றுள்ள சகலரது ஹஜ்ஜையும் அல்லாஹ் பொருந்திக்கொள்ளட்டும். முஸ்லிம்களின் சர்வதேச மாநாடாகக் கருதப்படும் இந்த ஹஜ்ஜுக் கடமையில், நமது சமூகத்தின் ஒற்றுமை மீள நிலை நாட்டப்பட வேண்டும்.

ஏகத்துவத்தை அழிக்கப் புறப்பட்டுள்ள ஏகாதிபத்தியவாதிகளின் முயற்சிகள் தோல்வியுற நாம் பிரார்த்திப்போம். ஒற்றுமையும், பிரார்த்தனையுமே முஸ்லிம்களின் பலமாகும். நில ஆக்கிரமிப்பு போரில், காஸா முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள அவலங்கள் மற்றும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க, முஸ்லிம் உம்மத்தின் ஒற்றுமை ஐ.நாவுக்கு அழுத்தமாக அமையட்டும்.- என்று குறிப்பிட்டுள்ளார்.

# இனங்களிடையே தப்பான அபிப்பிராயங்கள் களையப்பட்டு அமைதி நிலை உருவாகட்டும்

### வாழ்த்துச் செய்தியில் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவிப்பு

எமது நாட்டில் இனங்களுக்கிடையில் இருக்கும் தப்பான அபிப்பிராயங்கள் களையப்பட்டு, புரிந்துணர்வும் சகவாழ்வும் நிலையான அமைதியும் உருவாக இன்றைய ஈகைத்திருநாளில் பிரார்த்திப்போம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் மெற்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தனது பெருநாள் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்தத் தியாகத் திருநாளில் எம் அனைவர் மீதும் இறையருள் பொழிய, இறையன்பு கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

நபி இப்றாஹீம்மினதும் (அலைஹிஸ்ஸலாம்) அவரது மனைவி மற்றும் குழந்தையினதும் தியாகங்களை நினைவுபடுத்தும் முகமாக அல்லாஹ் இந்தத் திருநாளை எமக்கு அருளியுள்ளான். அந்தக்



குடும்பத்தினரின் தியாகங்கள் முழு மனித சமூகத்துக்கும் சிறந்த முன்மாதிரியாகும்.

தனி மனிதர்களின், குடும்பங்களின் மற்றும் சமூகங்களின் தியாகங்கள் மூலமே தேசம் வெற்றிகரமான எதிர்காலத்தை அடைய முடியும். இஸ்லாம் தியாகங்களின் ஊடாகவே வாழ்வில் வெற்றி அடைய முடியுமென்பதை போதிக்கின்றது.

எனவே நாங்கள் எமது வாழ்க்கையிலும் தியாகங்கள் பலவற்றை செய்ய வேண்டியுள்ளது. எமது தியாகங்கள் இறைவனுக்காக செய்யப்படுபவையாக இருக்கும்போதுதான் நாம் இறைவனின் நற்கூலியையும் இறையன்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்றைய எமது நாட்டு பொருளாதார சூழ்நிலையில் முஸ்லிம்களும், சகோதர இன மக்களும் பல பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கின்றனர். அடிப்படை தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. நாம் எம்மால் முடிந்ததை வழங்கி அவர்களது வாழ்விலும் ஒளியேற்றுவோம்.

அனைத்து சகோதர நெஞ்சங்களுக்கும் ஹஜ் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தியாகத் திருநாளாம் புனித ஹஜ்ஜுப் பெருநாளை உலகமெங்கு ம் கொண்டாடும் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கும் எனது இனிய ஹஜ்ஜுப் பெருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.- என்றுள்ளது.

# மக்கள் கஷ்டங்களில் இருந்தும் விடுபட்டு நிம்மதியான வாழ இந்த ஈகைத் திருநாள் சந்தோஷத்தைக் கொண்டு வரட்டும்

### வாழ்த்துச் செய்தியில் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளர் தாஜுதீன்

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்தும் வாழ்வாதார கஷ்டங்களில் இருந்தும் விடுபட்டு நிம்மதியான வாழ்வை அடைய இந்த ஈகைத் திருநாள் நம் வாழ்வில் சந்தோஷத்தையும் நிம்மதியையும் கொண்டு வரட்டும்.

இவ்வாறு பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான ஏ.எம்.எம். தாஜுதீன் தெரிவித்தார்.

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது நாடு வெகு விரைவில் தேர்தல் ஒன்றை சந்திக்க இருக்கின்ற நிலையில், புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடும் முஸ்லிம்களும் முஸ்லிம் தலைவர்களும் தேர்தலை ஒற்றுமையுடன் எதிர்கொள்கின்ற போது நமது தீர்மானிக்கும் சக்தியை அடைந்து கொள்ள முடியும்.

இவ்வாறே ஒரு ஸ்திரமான அரசைக் கட்டி எழுப்புவதற்காக முஸ்லிம்களும் சகோதர இன மக்களும் கைகோர்த்துச் செயற்படுகின்றபோது, நாம் எதிர்பார்த்திருக்கும் சிறந்த நாடு ஒன்றை எமது எதிர்கால தலைமுறையினருக்காக உருவாக்கிக் கொள்ள முடியும். அதற்காக இந்த ஈகைத் திருநாளில் நாம் பிரார்த்தித்துக் கொள்வோம்.

எனவே முஸ்லிம் மக்களதும் ஒட்டு மொத்த நாட்டு மக்களதும் ஒற்றுமைக்காக இந்தத் தியாகத்திருநாள் வழி சமைக்கட்டும்.- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கவலையுடன் பெருநாளைக் கொண்டாடும் பாலஸ்தீனுக்காக இருகரமேந்தி பிராத்திப்போம்

## பெருநாள் வாழ்த்துச் செய்தியில் ஹரீஸ் எம்.பி.

தியாகத்தையும், பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் முன்னோக்கி எடுத்துக்காட்டும் ஹஜ்ஜுப் பெருநாளை இலங்கையில் கொண்டாடிக் கொண்டிருக்கும் இலங்கை முஸ்லிங்களுக்கும், சர்வதேச அளவில் கொண்டாடிக் கொண்டிருக்கும் இஸ்லாமிய சகோதரர்களுக்கும் எனது ஹஜ் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகெங்கிலும் உள்ள இஸ்லாமியர்களிடையே பரஸ்பரப் புரிதல், அன்பு மற்றும் நற்கிரியைகளைப் பிரதிபலிக்கும் ஓர் ஆன்மீகத் திருநாளாக இந்த ஹஜ்ஜுப் பெருநாள் அமைந்திருந்தாலும் கூட இஸ்ரேலிய அரக்கர்களிடம் மாட்டிக்கொண்டு தவிக்கும் பலஸ்தீன உறவுகளை எண்ணி இந்தப் பெருநாள் தினத்திலும் உலக முஸ்லிங்கள் கவலையில் உள்ளதை யாராலும் மறுக்க முடியாது.

பலஸ்தீன பூமியில் நடக்கும் அநீதிகளை கண்டு கொள்ளாமல் சர்வதேச அரங்குகள் ஊமையர்களாகவும், செவிடர்களாகவும் இருக்கும் இந்த சூழ்நிலையில் நிம்மதியாக, சந்தோசமாக இந்த தியாகத்திருநாள் பெருநாளை கொண்டாட முடியாதவர்களாக இருக்கிறோம்.

பலஸ்தீன உறவுகளுக்கு கரங்கொடுக்கும் வகையில் இஸ்ரேலிய ஆதரவு நிறுவனங்களின் உணவுகள், பானங்கள், தயாரிப்புக்களை எமது பெருநாள் கொண்டாட்டங்களில் சேர்த்துக்கொள்ளாமல் விடுமாறும் பலஸ்தீனை அழிக்க இஸ்ரேலுக்கு உதவும் அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த எந்தவகையிலும் நாம் அந்த நிறுவனங்களுக்கு துணைபோகாமல் அவர்களின் தயாரிப்புக்களை நிரந்தரமாக பகிஷ்கரிக்குமாறும் முஸ்லிம் உம்மத்தை இந்த செய்தியூடாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



இஸ்லாம் போதித்த நல்லிணக்கம், சகோதரத்துவம் ஓங்கி எமது நாட்டை வெற்றி பாதைக்கு கொண்டு செல்ல எல்லோரும் ஒன்றிணைய முன்வருவதுடன் பலஸ்தீனம், உட்பட உலகின் சகல பாகங்களிலும் கஷ்டப்படும், கொடுமைகளையும், அநீதிகளையும் சந்திக்கும் எமது உம்மத்துக்களின் மகிழ்ச்சிக்காவும், நிம்மதிக்காகவும் இந்த தியாக திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் இறைவனிடம் பிராத்திப்போம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாலஸ்தீன உறவுகளுக்காக பிரார்த்திப்போம்!

### வாழ்த்துச் செய்தியில் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

இன்றைய ஈகைத்திருநாளில் பாலஸ்தீன அன்பு உறவுகளுக்காக துஆ செய்யும் அதேவேளை, இலங்கை வாழ் முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமை நிலைபெறவும் பிரார்த்திப்போம்.

கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஒருங்கிணைப்பு செயலாளருமான ரஹ்மத் மன்சூர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நபி இப்றாஹீம்மினதும் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது மனைவி மற்றும் குழந்தையினதும் தியாகங்களை நினைவுபடுத்தும் முகமாக அல்லாஹ் இத்திருநாளை அருளியுள்ளான்.

அக்குடும்பத்தினரின் தியாகங்கள் முழு மனித சமூகத்துக்கும் சிறந்த முன்மாதிரியாகும். தனிமனிதர்களின், குடும்பங்களின் மற்றும் சமூகங்களின் தியாகங்கள் மூலமே வெற்றிகரமான எதிர்காலத்தை அடைய முடியும்.

அவ்வாறான நிலையில், பலஸ்தீனில் எமது அன்புறவுகள் கண்ணீர் சிந்துகின்றன. உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. அவர்களின் இலட்சியப் பயணம் வெற்றி அடைவதற்கும், சாந்தி, சமாதானம் விரைவில் மலரும். நாம் அனைவரும் துஆக்களைச் செய்வோமாக.

எமது நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமாதானமும் ஐக்கியமும் மலர வல்ல இறைவன் துணை புரிய வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகள் நீங்கி, சுபீட்சமான வாழ்வு மலர வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்புக்களை நல்க வேண்டும்.- என்று தெரிவித்துள்ளார்.

# இப்ராஹீம்மின் இறை அடிமைத்துவத்தை வாழ்வில் முன்மாதிரியாகக் கொள்வோம்

### புனித ஹஜ்ஜுப் பெருநாள் செய்தியில் தௌபீக் எம்.பி. தெரிவிப்பு

புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுகின்ற இன்றைய ஈகைத் திருநாளில் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் பொறுமை, தியாகம், அர்ப்பணிப்பு மற்றும் இறை அடிமைத்துவம் போன்றவற்றை முன்மாதிரியாகக் கொண்டு எமது வாழ்விலும் அவற்றைக் கடைப்பிடித்தொழுக திடசங்கற்பம் பூணுவோம்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம். எஸ். தௌபீக் தெரிவித்துள்ளார்.

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

இறைவனின் கட்டளைக்கு முழுமையாக அடிபணிந்து நபி இப்ராஹீம் (அலை) தனது அன்பு மைந்தன் இஸ்மாயிலை (அலை) அறுத்து குர்பான் கொடுப்பதற்கு தயாரான வரலாறு எமக்கு முக்கிய படிப்பினையாக அமைந்திருக்கிறது.

புனித ஹஜ் கடமை என்பது முஸ்லிம்களிடையே எவ்வித பேதமுமில்லை என்கிற மிகப்பெரும் தத்துவத்தை உணர்த்துவதுடன் நமது தனிப்பட்ட அபிலாஷைகளை முற்றாகப் புறமொதுக்கிவிட்டு இறைவனுக்கு அடிபணிதல் எனும் கொள்கையை மாத்திரம் கடைப்பிடிக்கின்ற இஸ்லாமியர்களாக, ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

எமக்குள் பலமாக இருக்க வேண்டிய ஐக்கியத்தை தொலைத்து விட்டு, கருத்து முரண்பாடுகளாலும் பிளவுகளாலும் எமது நாட்டில் மாத்திரமல்லாமல் உலகளாவிய ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அழுத்தங்களுக்கும் முகம்கொடுத்து, அல்லலுறுகின்ற எமது சகோதரர்களின் நிம்மதியான வாழ்வுக்காகவும் சில அரபு நாடுகளில் தமது சொந்த மண்ணிலேயே யுத்த கோரப்பிடிக்குள் சிக்குண்டு குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என்ற பாரபட்சமின்றி ஆயிரக் கணக்கில் கொல்லப்படுகின்ற எமது முஸ்லிம் உம்மத்தின் மீட்சிக்காகவும் இந்தப் புனிதத் திருநாளில் எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திப்போம்.



இன்று புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடும் அனைத்து முஸ்லிம் சகோதர, சகோதரிகளுக்கும் எனது பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.- என்று தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. முடிந்துவிட்டதென யாரும் நினைக்க வேண்டாம்

## தனது வருகை ஆரம்பித்துவிட்டது என்கிறார் சசிகலா

“அ.தி.மு.க. முடிந்துவிட்டது என்று யாரும் நினைக்க வேண்டாம். ஏனென்றால் என்னுடைய என்ட்ரி ஆரம் பித்துவிட்டது.”

– இவ்வாறு அ.தி.மு.க. முன்னாள் பொதுச்செயலாளர் சசிகலா தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. ஒன்றிணைவது தொடர்பாக சென்னை போயஸ் கார்டனில் செய்தியாளர்களைச் சந்தித்த சசிகலா,

“எம்.ஜி.ஆருக்கு பின் ஜெயலலிதாவும் நானும் பல இன்னல்களை சந்தித்து, மிகப்பெரிய இயக்கமாக அதிமுகவை கட்டமைத்தோம். இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய இயக்கமாக உருவாக்கினோம். ஆனால் இன்று அ.தி.மு.க. தொடர்ந்து சரிவுகளை சந்தித்து வருகிறது. இதற்கு காரணம் என்னவென்றால், ஒருசில சுயநலவாதிகள் கட்சியை இந்த அளவிற்கு எடுத்துச்சென்றுள்ளனர். இதை எல்லாவற்றையும் நான் பொறுமையாக பார்த்துக்கொண்டிருந்தேன்.

யாரையும் கட்சியில் இருந்து நீக்க கூடாது என்பார் எம். ஜி.ஆர். ஆர்.எம். வீரப்பன் போன்றோர் ஜெயலலிதாவுக்கு தொந்தரவுகளை தந்ததை எம்.ஜி.ஆர். அறிந்திருந்தார். ஆனாலும், யாரையும் அவர் கட்சியில் இருந்து நீக்கவில்லை.

எனக்கென்று சொந்த ஊர், சொந்த சாதி இல்லை. அ.தி.மு.கவில் வாரிசு அரசியலும், சாதி அரசியலும் கிடையாது. ஆனால், அ.தி.மு.கவில் தற்போது குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் சாதி அரசியல் செய்கின்றனர். அ.தி.மு.கவில் சாதி அரசியல் செய்வதை தொண்டர்கள் யாரும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். நானும் பொறுத் துக்கொள்ள மாட்டேன். சாதி அரசியல் செய்திருந்தால் எடப்பாடி பழனிசாமிக்கு முதலமைச்சர் பதவி கொடுத் திருப்பேனா?.

அ.தி.மு.க. 3 ஆவது மற்றும் 4 ஆவது இடத்துக்கு சென்றுள்ளது. இதற்கெல்லாம் யார் காரணம். அ.தி.மு.கவுக்கு மக்கள் மத்தியில் நல்ல மதிப்பு உண்டு. அதனால் தானும் கெட்டு, கட்சியையும் கெடுக்க வேண்டாம் என்பதே அனைவரின் எண்ணமும். அதிமுகவுக்கு நல்ல நேரம் வந்துவிட்டது. நான் இத்தனை நாள் சொன்னது வேறு. நமது நேரம் கனிந்து வந்துள்ளது. நான் சொல்லி வந்த நேரம் இதுதான். தமிழக மக்கள் அ.தி.மு.க. பக்கம் இருப்பார்கள்.

அ.தி.மு.க. முடிந்துவிட்டது என்று யாரும் நினைக்க



வேண்டாம். ஏனென்றால், என்னுடைய என்ட்ரி ஆரம்பித்துவிட்டது. என் பின்னால் தொண்டர்களும், மக்களும் இருக்கிறார்கள். அதனால் 2026 இல் அ.தி.மு.க. ஆட்சியை தனிப்பெரும்பான்மையுடன் அமைப்போம்.

நான் எப்போதும் அதிகம் பேச மாட்டேன். முக்கியமான நேரத்தில் தான் குரல் கொடுப்பேன். அந்த சமயம் இப்போது வந்துவிட்டது. அதனால், இனி அ.தி.மு.க. தொண்டர்கள் கவலைப்பட வேண்டாம். விரைவில் சுற்றுப்பயணம் செல்ல உள்ளேன். பட்டிதொட்டி எல்லாம் சென்று மக்களை சந்திக்க உள்ளேன். தி.மு.கவின் கோரப்பிடியில் இருந்து மக்களை காக்க வேண்டும் என்றால் நாங்கள் வந்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம். அதனை நன்கு புரிந்தவர் என்பதால் நான் அவசரப்படவில்லை. எனக்கு ஒரு கண் அ.தி.மு.க. என்றால், இன்னொரு கண் தமிழக மக்கள். இடைத்தேர்தலை புறக்கணித்தது இந்த சூழலில் சரியில்லை. பிரதான எதிர்க்கட்சி அ.தி.மு.க. தான்.

ஜெயலலிதா நம்மை விட்டு சென்ற போது சில விஷ யங்கள் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்ததை செய்ய வேண்டும் என்பதைதான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். என்ன சலசலப்பு வந்தாலும் எனது பார்வை அந்த இலக்கு நோக்கி நேராக இருக்கிறது. மக்களுக்காக நான் 40 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறேன். மீதி காலமும் அது தொடரும். இன்று அ.தி.மு.க. நான்காக பிரிந்து இருக்கலாம். எல்லோரும் ஒன்றாக சேருவார்கள். இடைத்தேர்தல் புறக்கணிப்பு என்பது இந்த நேரத்தில் சரியில்லை, மிகப்பெரிய தவறு.”– என்றார்.

# நீட் தேர்வை பாதுகாப்பதை மத்திய அரசு நிறுத்த வேண்டும்

## மு.க. ஸ்டாலின் தெரிவிப்பு



சமூக நீதி, ஏழைகளுக்கு எதிரான நீட் தேர்வை பாதுகாப்பதை, மத்திய அரசு நிறுத்த வேண்டும் என தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரி வித்துள்ளார்.

அறிக்கையொன்றினூடாக இதனை தெரிவித்துள்ள அவர், நீட் தேர்வை சுற்றி இடம்பெற்று வரும் சர்ச்சைகள், அதன் சமத்துவமின்மையை எடுத்துக் காட்டுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பல்லாயிரம் ஆண்டுகளாக கல்வி மறுக்கப்பட்ட சமுதாயத்தில், ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத்திற்கு நாம் அதிக வாய்ப்புகளை வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

ஆனால், அதற்கு மாறாக அத்த கைய மாணவர்களின் வாய்ப்பை ‘நீட்’ என்ற தேர்வு பறிப்பதாக மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

‘நீட்’ முறைகேடு தொடர்பாக குஜராத் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள் ளதாகவும் அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தகுதியின் அளவாக கருதப்படும் நீட் தேர்வு, சமூகத்தின் அனைத்து மட்டங்களையும் பாதிக்கும் ஒரு பரவலான மோசடியாக மீண்டும் தன்னை வெளிப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மாணவர் விரோத, சமூக நீதி, ஏழைகளுக்கு எதிரான நீட் தேர்வை பாதுகாப்பதை மத்திய அரசு நிறுத்த வேண்டும் என மு.க ஸ்டாலின் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அத்துமீறி நுழைந்த ரஷ்ய போர் விமானம்

## பதிலடிக்கு தயாரான சுவீடன்



ரஷ்ய இராணுவத்திற்கு சொந்தமான போர் விமானம் ஒன்று சுவீடன் வான் வெளியில் அத்துமீறி நுழைந்த சம்பவம் அந்நாட்டு வான் போக்குவரத்து அதிகாரிகளை திடீர் பதற்றம் மற்றும் பரபரப்பு நிலைக்கு ஆளாக்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவத்தின் போது ரஷ்ய போர் விமானங்கள் சுவீடன் நாட்டின் கிழக்கில் உள்ள பால்டிக் தீவான கோட்லாந்தின் வான்பரப்பில் பறந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, சுவீடன் ஆயுதப் படை சார்பில், ரஷ்ய போர் விமானிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் ரஷ்ய விமானிகள் சுவீடனுக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதன்போது சுவீடன் சார்பில் இரண்டு போர் விமானங்கள் அனுப்பப்பட்டதையடுத்து ரஷ்ய விமானங்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளன.

ரஷ்ய விமானங்கள் சுவீடன் வான்வெளியில் நீண்ட நேரம் அத்துமீறின என சுவீடன் இராணுவம் குற்றம்சாட்டியது. இந்த நிலையில், “ரஷ்யாவின் செயல்களை ஏற்றுக் கொள்ளவே முடியாது. இவை பிராந்திய ஒருமைப்பாட்டுக்கான மரியாதையை குறைக்கும் வகையில் உள்ளது,” என சுவீடன் விமான படை தளபதி ஜோனஸ் விக்மேன் தெரிவித்துள்ளார்.

# காசா மீதான தரைவழித் தாக்குதலில் ஈடுபட்ட இஸ்ரேல் வீரர்கள் 307 பேர் கொல்லப்பட்டனர்





கடந்த ஒக்டோபர் 07 ஆம் திகதிக்கு பிந்தைய காசா மீதான தரைவழித் தாக்குதலில் ஈடுபட்ட இஸ்ரேல் இராணுவத்தில் 307 வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

காசாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 10 இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு இஸ்ரேல் இராணுவம் ஒரே நேரத்தில் பெரும் இழப்பை சந்தித்துள்ளமை இதுவே முதல் முறையாகும். இது இஸ்ரேல் படையினருக்கு ஆபத்தான போரை குறிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இழப்பின் மூலம் ஒக்டோபர் 27 அன்று காசா மீதான தரைப்படை நடவடிக்கை தொடங்கியதிலிருந்து கொல்லப்பட்ட இஸ்ரேலிய வீரர்களின் மொத்த எண்ணிக்கையை 307 ஆகக் குறைந்தது கொண்டு வருகிறது என்று இஸ்ரேலிய இராணுவத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கறுப்பு நிறமாக மாறிய சிங்கப்பூர் கரையோரம்

சிங்கப்பூர் செடோசா தீவின் கடற்கரையோரம் கறுப்பு நிறமாக மாறியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிங்கப்பூரில் உள்ள எண்ணெய் முனையத்தில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு தான் இதற்குக் காரணம் என தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அதிகாரிகள் கடற்கரையை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், செடோசா தீவின் கரையோரம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 17.06.2024




இன்று வளர்ச்சி காண்பீர்கள். இன்று பல பயனுள்ள விஷயங்களை செய்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் பிறரைக் கவரும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பணிக்கான நன்மதிப்பும் அங்கீகாரமும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வுடன் இருப்பீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக இருக்கும் வாய்ப்பு உள்ளது. இன்று நீங்கள் முக்கிய முதலீட்டு முடிவுகளை எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எந்தவிதமான ஆரோக்கிய குறைபாடும் இருக்காது.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் அமைதியும் எச்சரிக்கையும் தேவை. எதிர்பாரத வைகளைச் சந்திப்பீர்கள்.

பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். பணயில் வெற்றி காண புத்திசாலித்தனம் மற்றும் திறமைகளை பயன்படுத்துங்கள். எந்த சூழ்நிலையிலும் பதட்டமடையாதீர்கள். அதனால் உங்கள் ஆற்றல் குறைந்து விடும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இருவரும் பிரச்சி னைகளை தீர்க்க கலந்து ஆலோசிக்க வேண்டும். இதன் மூலம் இருவருக்கும் திருப்தி கிடைக்கும்.




இன்றைய நாள் வெற்றிகரமாக அமைய பொறுமையும் அமைதியும் தேவை. பதட்டப்படாமல் சகஜமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் நீங்கள் சில கஷ்டங் களை சந்திக்க நேரும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையிடம் அமைதியாகப் பேச வேண்டும். அதன் மூலம் அவர் உங்கள் மதிப்பை உணர்ந்து கொள்வார். நல்லுறவு ஏற்பட சரியான விதத்தில் உங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும். எதிர் காலத்துக்கென சேமிக்கும் பழக்கம் கொண்டிருந்தால் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை மேம்படுத்த வேண்டும்.பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் செயல்களில் தாமதங்களை சந்திக்க தயாராய் இருங்கள். திட்டமிடவேண்டியது அவசியம்.

சாதரணமாக ஆற்றும் பணிகளை விட இன்று சற்று கூடுதலான பணிகள் காணப்படும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தவறில்லாமல் கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் சம்பாத்தியம் குறைந்து காணப்பட்டாலும் நீங்கள் சேமிக்கும் பழக்கம் கொள்வீர்கள்.




இன்று அனுகூலமான நாள். உங்கள் செயல்களில் முன்னேற்றம் காணும் நாள். உங்கள் சுய உந்துதலும் முயற்சியும் வெற்றியை பெற்றுத் தரும் நாள். உங்கள் அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும் நாள்.

உங்களுக்கு இன்று பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு வெளிச்சத்திற்கு வரும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறைந்த நேரத்தில் தரமாக பணிகளை முடித்து தருவீர்கள்.

உங்கள் அன்பில் உங்கள் துணை மயங்குவார். அவருக்கு கிடைத்த முக்கியத்துவத்துக்கு மகிழ்ச்சியடைவார். இதன் மூலம் உறவு வலுப்படும்.

உங்கள் நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. பொறுமையுடன் இருக்க வேண்டும். உங்கள் விருப்பங்கள் நிறைவேற காத்திருங்கள்.

யாரும் உங்கள் பணிகளை கவனிக்காவிட்டாலும் தரமான பணிகளை வழங்குங்கள். உங்கள் பணிக்கான பாராட்டு இப்பொழுதில்லா விட்டாலும் பிறகு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் பழகும் போது பொறுமை தேவை. நட்புடன் அவருக்கு விஷயங்களை புரிய வைக்க வேண்டும். உங்கள் உறவின் மகிழ்ச்சி முழுதும் உங்கள் கைகளில்தான் உள்ளது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய முடிந்த அளவு செலவை கட்டுப்படுத்த வேண்டும்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும். முக்கிய முடிவு களை வேறு சமயத்துக்குத் தள்ளிப் போடுங்கள். உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை வளர்த்துக் கொள் ளுங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தரமா னதாக குறித்தநேரத்தில் வழங்குவது உங்கள் கைகளில் தான் உள்ளது. இன்றைய நாளை சிறப்பாகத் திட்டமிடுங்கள். கவனச் சிதறலின்றி பணியாற்றுங்கள்.

உங்கள் திருமண வாழ்க்கை சிறப்பாக அமைய இருவரும் சமமாக பொறுப்பேற்று செயல்பட வேண்டும். இருவரும் நட்புடன் இருந்தால் அனைத்தும் சிறப்பாக இருக்கும்.

பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.




முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உங்களை எப்பொழுதும் உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இன்று தவறுகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால் கவனமுடன் பணியாற்றவும். அர்ப்பணிப்புடன் பணியாற்றி உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுங்கள்.

இருவரும் எப்பொழுதும் உங்கள் கருத்துகளை சிறப்பாக பரிமாறிக் கொள்ள வேண்டும். எதைச் சொல்வதாக இருந்தாலும் அன்பாக அமைதியாக கூற வேண்டும்.

பணம் வந்து போகும். பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.ஆரோக்கியமில்லாத உணவை உண்ணாதீர்கள். எண்ணெய் மற்றும் கார உணவுகள் உங்கள் முகத்தின் தோலை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.06.2024




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உங்கள் உறுதியும் தைரியமும் உங்களை முன்னேற்றும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியைப் பாராட்டுவார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

சொல்லிலும் செயலிலும் உங்கள் துணையிடம் நீங்கள் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவர் மகிழ்வார். உறவு வலுப்படும்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். இன்று நிதிநிலை சுதந்திரமாக இருக்கும்.

உங்கள் விருப்பபடி அனைத்தும் நடக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதிபலிக்கும்.




இன்றைய நாள் அமைதியாக இருக்க பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்ளுங்கள். அனைத்து சூழ்நிலைகளையும் நீங்கள் சமாளிக்கத் தியானம் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

பணியாற்றும் பாணியில் கவனமாக இருங்கள். பணிகள் சிறிது அதிகமாக காணப்படும். அதனை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டு சிறப்பாக ஆற்றுங்கள்.

உங்கள் இருவரிடையே சிறந்த தகவல் பரிமாற்றம் மற்றும் தெளிவு தேவை. இதன் மூலம் இருவர் உறவிலும் ஆர்வம் குறையாமல் இனிமை நிறைந்திருக்கும்.

ஏழைக்கு பண உதவி செய்வதன் மூலம் உங்களுக்கும் உங்கள் துணைக்கும் நல்ல பலன் கிடைக்கும். தோல் சம்பந்தமான பாதிப்புகள் ஏற்படும்.




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தைரியமாக மேற்கொண்டு சிறப்பாக ஆற்றுங்கள். உங்கள் திறமைகளை காட்டுவதில் முனைப்பாக இருப்பதன் காரணமாக இன்று முழுவதும் பணியில் மூழ்கி இருப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் கட்டுப்பாடுடனும் பக்குவமாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு செழிப்பாக இருக்கும். இன்றைய நாளை மறக்க முடியாத நாளாக ஆக்க இருவரும் வெளியிடங்களுக்கு சேர்ந்து செல்லுங்கள். இன்று நிதிநிலையில் நம்ப முடியாத அளவு பலன் இருக்கும்.




வாழ்வில் உங்கள் பொறுப்புகள் அதிகமாகும். இது உங்களுக்கு சிறிது பதற்றத்தை ஏற்படுத்தும். குழப்பம் ஏற்படாதபடி தெளிவான இலக்குகளை அமைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிக்கு இப்பொழுது சிறந்த அங்கீகாரம் கிடைக்காது. என்றாலும் நீங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் நீங்கள் நினைத்ததைவிட விரைவில் அங்கீகாரம் பெறுவீர்கள். நல்ல நேரம் காத்திருக்கிறது என்பதை மனதில் கொள்ளுங்கள். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது வார்த்தைகளை தேர்ந்தெடுத்து பேசுங்கள். பக்குவமாகவும் நட்புடனும் நடந்து கொண்டால் நல்ல புரிந்துணர்வு வளரும்.

உங்கள் செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகரிக்க பரிகாரம் மேற்கொள்ளவேண்டியிருக்கும்.





